## பெரம்பூர் மக்களை ஏமாற்ற நினைக்கும் அட்டைக்கத்திகளைப் புறந்தள்ளுங்கள்!

# சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் பெயர் பெற்ற ஆர்.டி.சேகருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்!

## பெரம்பூர் தொகுதியில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.21-

**சென்னை, பெரம்பூரில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், பெரம்பூர் தொகுதி வேட்பாளர் ஆர்.டி.சேகரை ஆதரித்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், "பெரம்பூர் மக்களை ஏமாற்ற நினைக்கும் அட்டைக்கத்திகளைப் புறந்தள்ளுங்கள். சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் பெயர் பெற்ற ஆர்.டி.சேகருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்" என்று குறிப்பிட்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-

முதலில் இவ்வளவு சிறப்பான, அன்பான, எழுச்சியான வரவேற்பு கொடுத்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 18 நாட்களாக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து, நம் வெற்றி வேட்பாளர்களுக்குநம் உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு கூட்டணிக் கட்சிகளின் சின்னத்திலும் வாக்கு சேகரித்துவிட்டு, இன்று உங்களையெல்லாம் பார்ப்பதற்கு பெரம்பூர் வந்திருக்கிறேன்.

நம் வெற்றி வேட்பாளர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று உங்களையெல்லாம் ஆசையாக கேட்க வந்திருக்கிறேன்.

சென்ற 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது அவரை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்பினீர்கள். ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டிருக்கிறார். இப்போது அதே உரிமையோடு மீண்டும் அவருக்கு வாய்ப்புக் கொடுங்கள். இந்த பெரம்பூரில் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் நிச்சயம் மிகச் சிறப்பான ஒரு சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படுவார். அவருக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் வாய்ப்பளியுங்கள் என்று உங்களைக் கேட்க வந்திருக்கிறேன்.

### தோளோடு தோள் நின்று உறுதுணை!

இன்று ஆர்.டி.சேகர் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டு வந்திருக்கிறேன். அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களை நான் உங்களிடம் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் அனைவருக்கும் தெரிந்தவர்தான் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலேயே, இந்தப் பகுதியில் மாவட்டச் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றியவர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். எனக்கு என்ன பெருமை என்றால், நான் இளைஞர் அணிச் செயலாளராக இப்போது இருக்கிறேன். நான் இளைஞர் அணிச் செயலாளராகும்போது, அவர் எனக்கு இளைஞர் அணித் துணைச் செயலாளராக எனக்குக் கீழ் செயல்பட்டு, எனக்குத் தோளோடு தோள் நின்று எனக்கு உறுதுணையாக இருந்தவர்தான் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். அந்த உரிமையோடு, உணர்வோடு அவருக்கு வாக்கு கேட்டு நான் வந்திருக்கிறேன்.

### வித்தியாசம் தெரியாதவர்கள்!

இன்னும் சொல்லப்போனால், என் உடன்பிறவா அண்ணனுக்கு வாக்கு கேட்டு உரிமையோடு வந்திருக்கிறேன். இந்த பெரம்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டையும், ஒவ்வொரு குடும்பத்தையும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவர் பெயரையும் தெரிந்து வைத்திருப்பவர்தான் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். ஆனால், இன்று பெரம்பூருக்கும் பெரம்பலூருக்கும் வித்தியாசம் தெரியாதவர்களெல்லாம் இன்று பெரம்பூரில் வந்து உங்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்து, பெரம்பூர் மக்களை ஏமாற்றலாம் என்று நினைத்துக் கனவு கண்டு கொண்டு இருக்கிறார்கள். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். ஏன் இப்போது வந்திருக்கிறார்கள்? அவர்களுக்கும் பெரம்பூருக்கும் இதற்கு முன்னால் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? இதற்கு முன்னால் வந்து உங்களைப் பார்த்திருக்கிறார்களா?



### ஆர்.டி.சேகர் - மண்ணின் மைந்தர்!

அண்ணன் ஆர்.டி.சேகர் வெறும் தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் உங்களை வந்து பார்க்கிறவர் கிடையாது. வருடம் முழுதும் உங்களோடு வாழக்கூடியவர், இந்த மண்ணின் மைந்தர். உங்கள் குடும்பத்தில் ஒருவர்தான் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். இன்று வேறு ஒரு கும்பல் வந்து உங்களை ஏமாற்றலாம் என்று பார்க்கிறார்கள், ஜாக்கிரதையாக இருங்கள். அவர்களின் வாழ்க்கையும் உங்கள் வாழ்க்கையும் உங்கள் தேவையும் சம்பந்தமே கிடையாது. இதுவரைக்கும் அவர்கள் பெரம்பூர் பக்கம் எட்டிப் பார்த்தது கூடக் கிடையாது. ஆனால், ஆர்.டி.சேகர் அப்படி கிடையாது. உங்களில் ஒருவர், மண்ணின் மைந்தர். பெரம்பூர் மக்களிடமிருந்து அவரையோ, அவரிடமிருந்து பெரம்பூர் மக்களையோ பிரித்துப் பார்க்க முடியாது. உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடியவர். உங்களின் சுக துக்க நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு கொண்டு உங்களோடு இருக்கக்கூடியவர்.

கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலப் பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள். மழை, வெள்ளம், புயல் வந்தபோது அண்ணன் அவர்கள் களத்தில் இறங்கி மழையில் நனைந்து, இடுப்பளவு தண்ணீரில் நின்று உங்கள் கூட நின்று உங்களுக்கு உதவி செய்தவர். அது மட்டுமல்லாமல், கொரோனா காலத்திலும் அவர் உயிரைப் பணயம் வைத்து இந்த பெரம்பூர் பகுதி மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்.

### எண்ணற்ற திட்டங்கள்!

சட்டமன்ற உறுப்பினராக எண்ணற்ற திட்டங்களை இந்த பெரம்பூர் தொகுதிக்கு அவர் கொண்டு வந்திருக்கிறார். இதையெல்லாம் செய்துவிட்டுத்தான் அந்த உரிமையோடு உங்களிடம் இன்னொரு முறை வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டு வந்திருக்கிறார்.

அண்ணன் ஆர்.டி.சேகரை வெற்றி பெற வைத்தீர்கள் என்றால், நீங்கள் உரிமையோடு அவர் வீட்டுக்குப் போகலாம், அவரிடம் என்ன வேண்டுமானாலும் நீங்கள் கேட்கலாம். உங்கள் கோரிக்கையைச் சொல்லலாம். நிச்சயம் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பார். ஒரு போன் செய்தால் போதும், நீங்கள் அவரைத் தேடி வர வேண்டாம். அவர் உங்கள் வீட்டுக்கு வந்து உங்களின் தேவைகளை உடனடியாகச் சரிசெய்து கொடுப்பார். இவற்றையெல்லாம் நீங்கள் மற்றவர்களிடம் எதிர்பார்க்க முடியாது, அதனால் ஏமாந்துவிடாதீர்கள். அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் பங்களாவில் இருக்கக்கூடிய பண்ணையார் கிடையாது. உங்கள் மண்ணின் மைந்தர், உங்கள் பக்கத்து வீட்டில் இருக்கக்கூடிய உங்களில் ஒருவர்.

பெரம்பூரில் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களைத் தவிர, வேறு யாருக்காவது வாய்ப்புக் கொடுத்துவிட்டீர்கள் என்றால், அப்படி தப்பித் தவறி வந்தார்கள் என்றால், நாளைக்கு ஒரு சின்னப் பிரச்சினை என்றால் கூட 30 கிலோமீட்டர் நீங்கள் சென்று அவர்கள் பங்களா வீட்டு வாசலில் நுழைவாயிலுக்கு முன்னால் நீங்கள் நிற்க வேண்டும். அந்த நுழைவாயிலுக்கு உள்ளே கூட உங்களை விடமாட்டார்கள் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கொடுமை எல்லாம் சுயமரியாதை உள்ள பெரம்பூர் மக்களுக்கு வேண்டாம் என்று உங்களுக்கு ஞாபகப்படுத்து வதற்குத்தான் நான் வந்திருக்கிறேன். சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் பெயர் போன அண்ணன் ஆர்.டி.சேகர் வேண்டுமா? ஓய்விற்கும் சோம்பேறித்தனத்துக்கும் பெயர் போன வெறும் அட்டைக் கத்திகள் உங்களுக்கு வேண்டுமா என்பதை இந்தத் தேர்தலில் நீங்கள் முடிவு செய்யுங்கள்.

நான் அடிக்கடி சொல்வதுண்டு, தேர்தல் என்பது ஒரு திருவிழா என்று சொல்வார்கள். திருவிழா நேரத்தில் எல்லோரும் கடை போடுவார்கள், செட் எல்லாம் போடுவார்கள், பார்த்திருக்கிறீர்களா? தாஜ்மஹால், ஈஃபிள் டவர் மாதிரி அலங்காரம் செய்வார்கள். அங்கு இருக்கக்கூடிய பகுதி மக்கள் எல்லாம் நம் ஊருக்கு நம் பகுதிக்கு, தாஜ்மஹால் கொண்டு வந்துவிட்டார்கள், ஈஃபிள் டவர் வந்துவிட்டது என்று சொல்லி போட்டோ எடுத்துக்கொள்வார்கள். கூட்டம் கூடுவது உண்மைதான், ஆனால், அவையெல்லாம் உண்மையானது கிடையாது. அதெல்லாம் வெறும் அட்டை, அட்டையில் செய்தது. ஒரு சின்னக்காற்று அடித்தது என்றால், அதெல்லாம் அங்கு இருக்காது ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தட்டினால், கீழே விழுந்துவிடும். அட்டைகளை நம்பி ஏமாந்து போய்விடாதீர்கள். திருவிழா முடிந்ததும் கடைகள் எல்லாம் கழற்றிவிட்டு எல்லோரும் அவரவர் வேலையைப் பார்க்க சென்றுவிடுவார்கள்.

அதே மாதிரிதான் இப்போது வந்திருக்கிற அந்த அட்டைக் கத்திக் கூட்டமும், தேர்தல் முடிந்ததும் அவரவர் பங்களாவில் ஒளிந்து கொள்வார்கள். ஆனால், ஆர்.டி.சேகர் அண்ணன் உங்களோடு இருப்பார், உங்கள் பகுதியில் இருப்பார்.

படத்தில் நிறைய ஹீரோக்களை பார்த்திருப்போம். நிஜத்தில் ஒரு ஹீரோ என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். யாருக்கும் பயப்படாமல் இருக்கவேண்டும். வில்லன்களின் சதித்திட்டங்களைத் தெரிந்துகொண்டு, அவற்றை முறியடித்துக் காட்ட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஹீரோ இன்று தமிழ்நாட்டில் இருக்கிறார் என்றால் அது நம் தலைவர் நம் முதலமைச்சர் அவர்கள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

### இந்தியாவிலேயே எதிர்த்த முதல் தலைவர்!

அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் சேர்ந்து மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த முயற்சி செய்தார்கள். ஆனால் நம் முதலமைச்சர் என்ன செய்தார்? பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000, கோடைக்காலச் சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய் கொடுத்து பா.ஜ.கவின் சதித்திட்டத்தை முறியடித்தவர் நம் ஹீரோ, நம் தலைவர், நம் முதலமைச்சர்.

தொகுதி மறுவரையறை மசோதாவைக் கொண்டு வந்து தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் பறிக்கப் பார்த்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். அந்த மசோதாவை இந்தியாவிலேயே எதிர்த்த முதல் தலைவர், முதல் முதலமைச்சர் நம் தலைவர் அவர்கள்தான். அந்த மசோதாவைத் தீயிட்டுக் கொளுத்தி, நம் தலைவர் அதிலும் வெற்றி பெற்றார். நாடாளுமன்றத்தில் அந்த மசோதாவைத் தோற்கடித்துப் பாசிச பா.ஜ.கவை நம் தலைவர் ஓட ஓட விரட்டியடித்தார். இதனால்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்குக் அவுட் ஆஃப் கண்ட்ரோல்தான். ஏனென்றால், தமிழ்நாடு என்றைக்குமே சுயமரியாதை மண் என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள்.

நம் தலைவர் அவர்கள்தான் உண்மையான நாயகன், நிஜ நாயகன். போலி நாயகர்களை நம்பி ஏமாந்துவிடாதீர்கள். இன்று புதிதாக வருகிற சில பேர் தி.மு.கவை அழிப்பேன் ஒழிப்பேன் என்று சொல்லிக் கிளம்பி வருவார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. 70 வருடங்களுக்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்களே பதில் சொல்லியிருக்கிறார். எங்களை அழித்துப் புதைக்க வேண்டும் என்று நாலடிக்குக் குழி வெட்ட வருவார்கள், தி.மு.கவை ஒழித்துவிடுவேன் என்று சொல்வார்கள். அவர்கள் குழி வெட்டி முடிப்பதற்குள் நாங்கள் எட்டடிக்கு வளர்ந்திருப்போம். பக்கத்திலேயே எங்களுக்கு எட்டடிக்குக் குழி வெட்டுவார்கள், அவர்கள் குழியை வெட்டுவதற்குள் நாங்கள் 16 அடி வளர்ந்திருப்போம். நீங்கள் எங்களை வெட்ட வெட்ட நாங்கள் வளர்ந்துகொண்டேதான் இருப்போம். தி.மு.கவை எந்தக் கொம்பனாலும் அழிக்கவே முடியாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். அதை நாம் இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இங்கு அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் வெற்றி பெற்றார் என்றால், அவர் இங்கு வேட்பாளர் இல்லை. நான் வேட்பாளர், நம் தலைவர் கலைஞர் வேட்பாளர் என்று நினைத்துக்கொண்டு இந்தப் பிரச்சாரத்தைச் செய்யுங்கள். இன்னும் மூன்று நாட்கள் நம் கைகளில் இருக்கின்றன. நான் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்துக்குச் சென்று வந்திருக்கிறேன்.

நான் நிச்சயம் சொல்கிறேன், மீண்டும் தி.மு.க ஆட்சி அமைக்கப்போவது உறுதி. நம் தலைவர் மீண்டும் முதலமைச்சராக வரப்போவது உறுதி. அதற்கு மேலும் வலுசேர்க்கிற விதமாக அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களை இந்த பெரம்பூர் தொகுதியில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும்.

### பெரம்பூர் திட்டங்கள்!

இந்தத் தொகுதிக்கு நம் திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை செய்து கொடுத்துள்ளது. கணேசபுரம் மேம்பாலப் பணிகள் இன்று முடியும் நிலையில் இருக்கின்றன. அந்தத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தது நம் திராவிட மாடல் அரசு, அதை கொண்டு வந்தது, உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் பயோ மைனிங் முறையில் 48 லட்சம் மெட்ரிக் டன் கழிவுகள் அகற்றப்பட்டிருக்கின்றன.

இந்து, கிறிஸ்துவ மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுக்கு இறந்தவர்களை நல்லடக்கம் செய்திட, தலா மூன்று ஏக்கர் நிலம் என மொத்தம் ஒன்பது ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கண்ணதாசன் நகர், முல்லை நகர் பேருந்து நிலையங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்று புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஈ.ஹெச். சாலையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எம்.கே.பி. நகரில் ஒரு புதிய திருமண மண்டபம். 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், வியாசர்பாடி கால்வாய் ஆகியவற்றில் இன்று வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

### உதயசூரியன் சின்னம்!

இவ்வளவு திட்டங்களைச் செய்து கொடுத்துவிட்டுத்தான் மீண்டும் இன்னும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள். இன்னும் இந்தப் பகுதிக்கு, இந்தத் தொகுதிக்கு மேன்மேலும் பல திட்டங்களைக் கொண்டு வருகிறேன் என்ற அந்த உறுதிமொழியைக் கொடுத்துவிட்டுப் போகத்தான் நான் வந்திருக்கிறேன். இன்று தேதி 19. தேர்தல் நாள் 23. இன்னும் நம் கைகளில் மூன்று நாட்கள் இருக்கின்றன. நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டீர்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் அடுத்த மூன்று நாள் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேருங்கள்.

நம் தலைவர் கடந்த ஐந்து வருடத்தில் நல்ல நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார். வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறோம். ஒவ்வொருவரையும் பார்த்துப் பிரச்சாரம் செய்யுங்கள். உங்கள் தெருவில், உங்கள் வீட்டில், உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய யாரைச் சந்தித்தாலும், ஒவ்வொரு வாக்காளரையும் பார்த்துச் சந்தித்துப் பேசுங்கள். ஏன் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்? ஏன் பெரம்பூரில் தி.மு.க வெற்றி பெற்றுக் காட்ட வேண்டும்? என்பதை விளக்கிக் கூறுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியம் நம் திட்டங்களைச் சொல்லுங்கள். ஐந்து வருடம் நம் தலைவர் என்னென்ன செய்து கொடுத்திருக்கிறார் என்று சொல்லுங்கள். ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம், அந்த வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறோம், அதைச் சொல்லுங்கள்.

எல்லாவற்றையும் விட முக்கியம் அடிமைக் கூட்டத்தையும், சங்கிக் கூட்டத்தையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டோம். இந்த பெரம்பூர் என்றைக்குமே தி.மு.கவின் கோட்டை என்பதை மீண்டும் மீண்டும் பிரச்சாரம் செய்யுங்கள். அப்படி நீங்கள் செய்தீர்கள் என்றால், நிச்சயம் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் கடந்த முறை வாங்கிய வாக்குகளை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில், குறைந்தது 50,000 வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களை நீங்கள் வெற்றிபெற வைக்க வேண்டும்.

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். பெரம்பூர் தொகுதியில் வெற்றி அவசியம். அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன் வரவேற்புக்கு நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தொகுதிப் பார்வையாளர் தூத்துக்குடி ஜோயல், மாவட்டத் துணைச் செயலாளர் கமலகண்ணன், மாவட்டப் பொருளாளர் தயாளன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கருணா, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள் முருகன், ஜெயராமன், நவீன், வட்டக் கழகச் செயலாளர்கள் ராஜன், கார்த்திபன், உமாபதி, ஹரிதாஸ், செந்தமிழ் அரசன், சி.எஸ்.ரவி, ஆறுமுகம், அருள், மாரிமுத்து, தினகரன், முருகன், ராஜன், மலைச்சாமி, பாபு, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் கௌதம், பொன்.இளவரசன், ரவிக்குமார், லயோலா மதன், கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, சத்தியநாராயணன், இளைஞர் அணி பகுதி அமைப்பாளர்கள் ராஜ்குமார், சுரேஷ், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட ப்லரும் கலந்துகொண்டனர்.